Registered as a NewsPaper in Ceylon ★ ★ விலை: சதம் 15

SEP 1971 ... LIBRARY

குறைந்த செலவில்
சிறந்த சேவை



கொழும்புஒப்ரிக்கல்
95, ஸ்ரான்லி றேட் — யாழ்ப்பாணம்
(மக்கள் வங்கிக்கு அருகாமையில் மேல்மாடி)

ஈழநாடு
EELA NADU
National Tamil Daily
தேசிய தினசரி
தபால் பெட்டி எண். 49 போன்: 389

"தொண்டாற்றுவது என் மதம் எதிர்காலத்தைப் பற்றி நான் அல்லல்படுவதில்லை."

— மகாத்மா காந்தி.

மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் 50 அனுப்பி ஒரு அழகிய சரஸ்வதி படத்தையும், நவராத்திரி வரலாறும் தேவி தோத்திரப் பாடல்களும் என்ற புத்தகத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப்
தொழிற்சாலை
த. பெ. இல: 77 யாழ்ப்பாணம்.

மலர் 18 ஆவணி 26 றஜப் 20 (11—9—71) சனிக்கிழமை இதழ் 212

# சிறிமா - சுவரண் பேச்சுக்கள்
# கி. பாக் பிரச்னையும் பிரஸ்தாபம்

## இந்திய-சோவியத் நட்புறவு ஒப்பந்தம் பற்றி விளக்கம்

கொழும்பு, வெள்ளி

இலங்கையிலுள்ள இந்திய வெளிஉறவு அமைச்சர் சர்தார் சுவரண்சிங்கிற்கும் பிரதமமந்திரி சிறிமா பண்டாரநாயக்காவுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகின.

கொழும்பிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையில் இன்று காலை 9 மணிக்கு பேச்சுக்கள் ஆரம்பமாகின.

திரு சுவரண்சிங்கின் விஜயத்தையொட்டி ஏற்கனவே இலங்கைவந்துள்ள இந்திய அதிகாரிகள் ஆரம்பித்த பூர்வாங்கப் பேச்சுக்களின் அடிப்படையில் இருதலைவர்களும் தமது ஆலோசனைகளைத் தொடங்கியதாகத் தெரிகின்றது.

இந்தியாவுக்கும்- சோவியத் யூனியனுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட நட்புறவு ஒப்பந்தம் பற்றி திரு சுவரண்சிங் பிரதமருக்கு விளக்கம் கொடுத்திருப்பார் என்றும் இந்த ஒப்பந்தம் காரணமாக மண்டல சார்பற்ற கொள்கையிலிருந்து பாரதம் விலகிவிடவில்லையென்று அவர் தெளிவுபடுத்தியிருப்பாரென்றும் அவதானிகள் கருதுகின்றனர்.


இந்து சமுத்திர பாதுகாப்பு சம்பந்தமாகவும் பங்களாதேஷ் பிரச்சினை சம்பந்தமாகவும், இலங்கை இந்திய வர்த்தக தொடர்பு சம்பந்தமாகவும் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது. மேற்குப் பாகிஸ்தான் இராணுவத்தினர் கிழக்குப் பாகிஸ்தானில் நடாத்தும் அட்டகாசம் பற்றி திரு சுவரண்சிங் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவிடம் எடுத்துக் கூறினர். பேச்சுவார்த்தை மூன்று மணிநேரம் நடைபெற்றது.

விவசாய அபிவிருத்திக்கு 6 கோடி ரூபாய் பெறுமதியான இயந்திரங்களை இலங்கைக்கு வழங்க பேச்சுவார்த்தையின் போது சுவரண்சிங் உடன்பட்டதாக தெரிகிறது. கைத்தொழில் அமைச்சர் திரு டி. இலங்கரத்தின, நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா ஆகியோர் இந்தியக் கோஷ்டிக்கு மதியபோசன விருந்தளித்தனர்.

பிரதமரைக் கௌரவிக்கு முகமாக சுவரண்சிங் கோல்பேஸ் ஹோட்டலில் இரவுப் போசன விருந்தளித்தார். நாளை இரண்டாம் கட்டப் பேச்சுத் தொடரும்.

இன்றைய பேச்சுவார்த்தையில் பாரத வெளியுறவு அமைச்சரின் குழுவில் அவரது காரியதரிசி திரு எஸ். கே பானர்ஜி இலங்கையிலுள்ள இந்திய தூதுவர் திரு வை கே பூரி, வெளியுறவு அமைச்சு இலாகா செயலாளர் திரு எம். ஜி கோல்அடி, தென்கிழக்காசிய இலாகா இணைச் செயலாளர் ஆகியோர் பங்கு வகித்தனர். இலங்கையின் சார்பில் வெளியுறவு உதவி அமைச்சர் திரு லக்ஷ்மன் ஜயக்கொடி, வெளியுறவு அமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு ஆர் இரத்தினம், புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு என். கியூ டயஸ், வெளியுறவு தொடர்பு டைரக்டர் திரு வேர்னன் மென்டிஸ், குடிவரவு கட்டுப்பாடு அதிகாரி டபிள்யூ ரி ஜெயசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

[5-ம் பக்கம் பார்க்க]



சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகக் காட்சியளிக்கும் செல்வி ஜெயந்தினியின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று மாலை நடைபெறுகிறது. யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் இந்த அரங்கேற்றத்துக்கு தமிழக அறிஞர் சொல்லின்செல்வன் திரு. கி. வா. ஜகந்நாதன் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவிருக்கிறார். பதினான்கு வயதே நிரம்பப்பெற்ற செல்வி ஜெயந்தினி யாழ்ப்பாணம் பாரதி கலாமன்றம் திருமதி ஞானமணி செல்லையாவின் மாணவியாவார். பிரபல வர்த்தகரும் சமூகசேவையாளருமான திரு எம். பூபாலசிங்கம் ஜே. பி யின் புதல்வியான ஜெயந்தினியின் நாட்டிய அரங்கேற்றம் இன்றிரவு முடிவடைந்த பின் வீரசிங்கம் மண்டபத்திலிருந்து நீர்வேலி கந்தசுவாமி கோயிலடி வரை செல்லவும் உரும்பராய் சந்திவரை செல்லுதற்கும் இரண்டு பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## பதுக்கி வைக்கும் பொருட்கள் பறிமுதலாகும்

கொழும்பு, வெள்ளி

பொருட்களை பதுக்கி வைக்கும் வியாபாரிகளிடமிருந்து அவற்றைப் பறிமுதல் செய்வதென இன்று நடைபெற்ற வாழ்க்கைச் செலவினங்கள் சம்பந்தமான அமைச்சர்களின் உபகுழு முடிவு செய்துள்ளது. பொருட்களைப் பதுக்கி வைத்திருக்கும் வியாபாரிகளிடமிருந்து அவற்றைப் பறிமுதல் செய்யவும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சென்ற வாரத்தில் இலங்கையரல்லாதவர்களின் கடைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 1 கோடி 25 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

## கூ.மொ.வி. வெங்காய விநியோகத்தில் அதிருப்தி

மானிப்பாய், வெள்ளி

வெங்காய விநியோகத்தை நடத்திவரும் கூ. மொ வி ஸ்தாபனம் திருப்திகரமாக இயங்கவில்லை என்றும் இதனால் நாடுபூராவும் பெரும்பாலான பகுதிகளிலுள்ள பாவனையாளர்கள் கஷ்டமுறுவதாகவும் தெரிகிறது.

கொழும்பில் தேடுவாரற்று வெங்காயம் சந்தைகளில் இருப்பதாகவும் அதே வேளையில் திருகோணமலையில் வெங்காயம் பெற முடியாமல் இருப்பதாகவும் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

4000 அந்தர் வெங்காயத்தைக் கொள்வனவு செய்வதற்காக திருகோணமலை மாவட்ட அதிபர் பிரதிநிதி ஒருவரை நேற்று யாழ்ப்பாணம் அனுப்பியிருப்பதாக வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசத் தலைவர் திரு என் கி. சிவஞானம் கூறினார்.

கூ மொ வி ஸ்தாபனம் வெங்காய விநியோகத்தைத் திறம்படச் செய்யவில்லை என்றும் சேமிப்புச் சாலைகளிலும் கொழும்பு நடைபாதைகளிலும் வெங்காயம் தேங்கி அழுகிக்கிடப்பதாகவும் அவர் கூறினார்.

## பெருமாள் கோயிலில் இன்று கிருஷ்ண ஜயந்தி

யாழ்ப்பாணம் சனி

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் இன்று ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது. தமிழக அறிஞர் சொல்லின் செல்வர் திரு. கி. வா. ஜகந்நாதனும் இவ்விழாவில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துவார்.

**நிகழ்ச்சிகள்**

மாலை 6 மணி அபிஷேகம், இரவு 7-30 நாமத்தின் மகிமை என்னும் பொருள் பற்றி பிரம்மஸ்ரீ தி. சு. சிதம்பரசாஸ்திரிகள் சொற்பொழிவு, 8-15 பிரம்மஸ்ரீ கி சுப்பிரமண்ய சாஸ்திரிகள் 'மாய கிருஷ்ணன்' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவு, இரவு 9 மணி திவ்விய ஜீவன சங்கத்தினரின் பஜனை, 9-30 திருமதி சத்தியபாமா இராஜலிங்கம்- கண்ணன் பாடல்கள், 10-15 சொல்லின் செல்வர் கி வா

(5ம் பக்கம் பார்க்க)

# பூட்டோ கட்சிக்குள்ளும் கருத்துக் குழப்பம்?

## யாஹ்யாவை சந்திக்காததற்கு சுகவீனமல்லவாம் காரணம்

கராச்சி, செப். 10

ஜனாதிபதி யாஹ்யாகானுடன் பேச்சுவார்த்தை நடத்த மக்கள் கட்சித் தலைவர் பூட்டோ செல்லாததற்கு அவரது கட்சிக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டமையே காரணமென அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

இதற்கு முன்பாக திரு. பூட்டோவுக்குச் சுகயீனம் ஏற்பட்டுள்ளமையால் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள முடியவில்லை என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### கயானா கருத்து

கிழக்குப் பாகிஸ்தானில் ஓர் அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென்றும், முஜிபுர் மீதான விசாரணை நிறுத்தப்படவேண்டுமென்றும் கயானா விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கயானாவுக்குச் சென்றிருக்கும் இந்திய உள்நாட்டு ராஜாங்க அமைச்சர் திரு. கே. சி. பந்த், கயானாப் பிரதமர் திரு. பென்ஹாமுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்பே கயானா அரசினால் இவ்வறிக்கை வெளியிடப்பட்டது.

கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள வங்காளிகள் தங்கள் சொந்த நிலத்திற்குத் தாங்களே பிரதிநிதிகளென்று நினைக்கக்கூடிய ஏதோ ஒரு முறை ஆட்சியை ஏற்படுத்தியே தீரவேண்டுமென்று இந்தியாவிலிருந்த முன்னாள் அமெரிக்கத் தூதுவர் திரு. கால்பிரெய்த் கருத்துத் தெரிவித்துள்ளார்.

திரு. கால்பிரெய்த் அமெரிக்காவில் சிறந்த பொருளாதார நிபுணர்களில் ஒருவர்; பேராசிரியர். காலஞ்சென்ற அமெரிக்க அதிபர் ஜோன் கென்னடி காலத்தில் இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவராக நியமனம் பெற்றவர்.

இப்பொழுது இந்தியாவிலிருக்கும் அகதிகள் நிலைமையை ஆராய்வதற்காக இந்தியா வந்துள்ளார். நேற்று அவர் மேற்கு வங்காளத்திலுள்ள அகதிகள் முகாம்களைச் சுற்றிப் பார்த்தார். இதற்கு முன்பாக அவர் கல்கத்தா வந்து சேர்ந்ததும் நிருபர்களுக்கு அளித்த செய்தியில், ஷேக் முஜிபுர் ரஹ்மான் மீதான விசாரணையை ஒரு முடிவுக்கு கொண்டுவந்து, அவரை அவரது சொந்த மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றார்.

வங்காள மக்களின் கோரிக்கைகளுக்கு அமெரிக்காவில் ஆதரவில்லை என்று சொல்ல முடியாதென நிருபர் கேட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் அவர் கருத்துத் தெரிவித்தார்.

இந்தியா வந்திருக்கும் கிழக்குப்பாகிஸ்தான் அகதிகள் சுமையை இந்தியா மட்டும் சுமக்கவேண்டியதில்லை என்றும், சர்வதேச சமூகம் உதவி அளிக்குமெனத்தான் நம்புவதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

'பிராவ்தா' — 'இஸ்வெஸ்தியா' வில்

## தமிழ்நாடு அமைச்சர்களின் கருத்துக்கள் பிரசுரம்

மாஸ்கோ, செப்10

சோவியத் யூனியனில் தினமும் முறையே 80 லட்சம், 90 லட்சம் பிரதிகள் விற்பனையாகும் இரு பெரும் நாளிதழ்களான 'பிராவ்தா'வும், 'இஸ்வெஸ்தியா'வும் அண்மையில் தமிழக சட்டப்பேரவைத் தலைவர் திரு கே. ஏ. மதியழகனும், கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியனும் இந்திய-சோவியத் நட்புறவு ஒப்பந்தம் பற்றி 'சோவியத்நாடு' பத்திரிகையின் ஆதரவில் நடைபெற்ற வட்டமேசைக் கூட்டத்தில் நிகழ்த்திய உரைகளின் சில பகுதிகளைத் தங்கள் ஆகஸ்ட் மாதம் 28ந் தேதி இதழ்களின் முதற் பக்கத்தில் பிரசுரித்துள்ளன. அரசியல் தலைவர்கள், பொதுச்சபை பிரமுகர்கள், எழுத்தாளர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், தமிழ்நாட்டின் தலைநகரில் வாழும் பல அறிஞர்கள் முதலியோர் கூட்டத்திற்கு வந்திருந்தனர் என்பதையும் அப்பத்திரிகைகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்திய-சோவியத்நட்புறவு ஒப்பந்தமானது, உலக சமாதானத்தை வலுப்படுத்துவதில் ஆற்றக்கூடிய அரும்பணியைச் சட்டப்பேரவைத் தலைவரும், கல்வியமைச்சரும் வற்புறுத்திக் கூறினர் என்பதையும் அவ்விரு பத்திரிகைகளும் சுட்டிக்காட்டியுள்ளன. "மனித சமுதாயத்தின் முன்னேற்றப் பாதையில் இந்த ஒப்பந்தம் ஒரு மைல் கல்" என்று மதியழகனும், "இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதை இந்தியா முழுவதும் ஒருமனதாக வரவேற்கின்றது" என்று நெடுஞ்செழியனும் கூறியதை 'பிராவ்தா'வும் 'இஸ்வெஸ்தியா'வும் குறிப்பாக எடுத்துக்காட்டியுள்ளன.

இதற்குச் சில தினங்களுக்கு முன்னால் தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இந்திய-சோவியத் நட்புறவு ஒப்பந்தத்தை வரவேற்றுச் சோவியத் உதவிக் கான்சல் திரு. ஏ. ஏ. பிலிப் பெங்கோவுக்கு அளித்த பேட்டியும் இப்பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கிறதென்பது குறிப்பிடத்தக்கது.

### தடை

சாய்ந்தமருது, வெள்ளி

பொத்துவில் கிராம சபைக்கு உட்பட்ட பிரதான வீதிகளின் அருகாமையில் கருங்கற்கள் குவித்து வைக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

பாதைகளைச் சீர் செய்வதற்காகவே இக் கருங்கற்கள் சுமார் இரு மாதங்களுக்குமுன்பு குவித்து வைக்கப்பட்ட போதும் இது வரையிலும் அவை திருத்தி அமைக்கப்படவில்லை.

### பிரி. அமைச்சர் கெய்ரோ செல்கிறார்

லண்டன், செப் 10

எகிப்திய அரசாங்கத்தின் விசேஷ அழைப்பின் பேரில் பிரிட்டனின் வெளிநாட்டு, சாம்ராஜ்ய விவகார அமைச்சர் சேர் அலெக் டக்ளஸ் ஹியூம் இம்மாதம் 12-ம் திகதி கெய்ரோ செல்லவிருக்கிறார். சமீப காலமாக பிரிட்டிஷ்-எகிப்திய உறவுகளில் ஏற்பட்டுவரும் சுமுக நிலைக்கு இவ்விஜயம் ஒரு நற்சான்றாக அமைகிறது.

### பிரிட்டனில் பயிற்சி பெறுவார்

லண்டன், செப் 10

இலங்கை அரசாங்க தகவல் பிரிவைச் சேர்ந்த பத்திரிகைத் தொடர்பு அலுவலர் திரு. ஜி. டபிள்யூ. சுரேந்திரா மூன்று மாதப் பயிற்சி ஒன்றுக்காக பிரிட்டன் செல்லவிருக்கிறார். வடிவமைப்பு, காட்சியமைப்பு, படவிளக்க சாதனங்கள் ஆகியவற்றில் அவர் பயிற்சி பெறுவார்.

### கலைவிழா

சங்கானை, வெள்ளி

சண்டிலிப்பாய் நாமிலைக் கையர் கழகத்தாரின் கலைவிழா இம்மாதம் 11, 12-ம் திகதிகளில சண்டிலிப்பாய் சந்திக்கடுகாணமையில் நடைபெறும்.

இளம் பெண்ணின் சமயோசிதம்

## குழந்தையைக் காப்பாற்ற பாவாடையைக்கழற்றினர்

கோவிஸ், [செக்கோஸ்லவாக்கியா] செப். 10

மாடியிலிருந்து தலைகுப்பிற விழுந்துகொண்டிருந்த குழந்தையொன்றைக் காப்பாற்றுவதற்காக இளம்பெண் ஒருவர் நாணத்தைக் கைவிட்டு தனது கட்டைப் பாவாடையைக் கழற்றி உபயோகித்தார்.

கட்டிடம் ஒன்றின் மூன்றும் மாடி யன்னல் விளிம்பில் குழந்தை பொன்று நகர்வதை இந்த இளம்பெண் கீழே இருந்து பார்த்துவிட்டார். உடனே அக் குழந்தை விழப்போவதும் தெரிந்துவிட்டது. அவசரமாக தனது கட்டைப் பாவாடையை விசுக்கென்று கழற்றி பக்கத்தில் நின்ற இன்னொரு பெண்ணிடம் ஒரு தலைப்பைப் பிடிக்கும்படி கூறினர் பாவாடையை இருவரும் தூக்கிப் பிடித்தனர். குழந்தை தலைகுப்புற சரியாக பாவடையில் விழுந்து எதுவித ஆபத்துமின்றி தப்பியது.

உருகுவே நாட்டில்

## காவலில் வைக்கப்பட்டிருந்த பிரி. தூதர் விடுதலை

மொன்ட்டிவீடியோ செப்.10

உருகுவேயில் கப்பமாரு கொரிலாக்களினால் கடத்தப்பட்ட பிரிட்டிஷ் தூதுவர் திரு. ஜாக்சன் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவ்வருடம் ஜனவரி மாதம் திரு. ஜாக்சனை கப்பமாரு கொரிலாக்கள் கடத்திச் சென்றனர். கிட்டத்தட்ட 8 மாதங்களின் பின் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இவர் விடுதலை செய்யப்பட்டதும், உடனடியாக வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசோதனை செய்யப்பட்டார்.

பிரிட்டிஷ் தூதுவர் உடல் நலத்துடன் இருப்பதாக அவரைப் பரிசோதனை செய்த வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதே நேரத்தில் உருகுவே நாட்டின் சிறைச்சாலை அதிகாரி ராஜிநாமாச் செய்துள்ளார். இன்னொரு நகரத்திலுள்ள சிறைச்சாலையில், ரகசியமாக சுரங்க மொன்றைத் தோண்டி அதன்மூலம் சிறையிலிருந்த கொரிலாக்கள் தப்பி ஓடியுள்ளனர். இவர்களைக் கண்டு பிடிப்பதில் பொலிசாரும் ஆயுதப் படைகளும் தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். தப்பி ஓடிய எவரும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. முன்பு வந்த செய்திகளின்படி 139 பேர் தப்பியோடினர் என்று கூறப்படுகிறது. ஆனால் இப்பொழுது கிடைத்த செய்திகளின்படி 106 பேர் தான் தப்பி ஓடியதாக தெரிகிறது.

உருகுவே சிறைச்சாலைகளில் இவ்வித நிகழ்ச்சிகள் அடிக்கடி நடந்தவண்ணம் இருக்கின்றன. சில வாரங்களுக்குமுன் கப்பமாரு கொரிலாக்களைச் சேர்ந்த பெண்கள் தாங்கள் சிறை வைக்கப்பட்டிருந்த சிறைச்சாலையில் சுரங்கம் அமைத்து அதன் மூலம் தப்பி ஓடினர். இன்னொரு பகுதியில் கொரிலாக்கள் சிறைச்சாலை ஒன்றைத் தாக்கியபொழுது பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 8 பேர் கொல்லப்பட்டனர். இவ்வித நிகழ்ச்சிகள் இப்பொழுது இங்கு சர்வசாதாரணமாக நடைபெறுவதாகத் தெரிகிறது.

எம். ஸி. க்கு

## 15-ம் திகதி கார் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், சனி

நியமன எம். பி திரு. எம் ஸி. சுப்பிரமணியத்துக்கு பொதுமக்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கார் வழங்கும் வைபவம் இம்மாதம் 15-ம் திகதியே நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. ஏற்கனவே அறிவித்தபடி இவ்வைபவம் 12-ம் திகதி நடைபெறமாட்டாது.

யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் நடைபெறும் இவ்வைபவத்துக்கு மாநகர சபை உறுப்பினர் திரு மார்ட்டின் செல்லையா தலைமை வகிப்பார். இவ்வைபவத்தில் பாதுகாப்பு அமைச்சின் உதவி அமைச்சர் திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா, திருமதி வேதவல்லி கந்தையா, திரு. அ. வைத்திலிங்கம் ஆகியோர் உரையாற்றுவர்.

நல்லூர் கந்தசுவாமிகோவிலிலிருந்து நியமன எம்.பி. திரு எம் ஸி சுப்பிரமணியம் யாழ் திறந்த வெளியரங்கிற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

### பெற்றோர்-ஆசிரியர் சங்கக் கூட்டம்

உரும்பராய், சனி

உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலையில் பெற்றோர் ஆசிரியர்சங்க ஆண்டு ரார்ப்பணக் கூட்டம் நாளை ஞாயிறு பிற்பகல் மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. மாணவர்கள் இசைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

### அரசுக்குப் பாராட்டு

சங்கானை, வெள்ளி

பாவனையாளருக்கு வேண்டிய உணவுப் பொருட்களையும் மற்றைய அத்தியாவசியமான பொருட்களையும் மக்கள் பெறமுடியாது கஷ்டத்திற்குள்ளாகும் நிலைமை மாற்றி அமைக்க அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு சங்கானை கண்காணிப்புச் சபையினர் பாராட்டு தெரிவித்துள்ளனர். இப்படியான குறைபாடுகளுக்குக் காரணமாக விருக்கும் விவேகமற்ற உத்தியோகத்தர்களை உடனடியாக அகற்றவேண்டும் என்ற தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டு சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது!

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 11—9—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

249 மீ அல்லது 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 கிறிஸ்தவ நற்சிந்தனை 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

இரவு 6-15 மாணவர் மன்றம், 6-30 நாட்டுப் பாடல்கள், 6-45 வீட்டு வைத்தியர், 7-00 இசை நிகழ்ச்சி, 7-30 வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு.

# கண்ணன் கைக்குழலாக...

— ஆச்சார்ய வினோபாபாவே —

ஆண்டவன் ஆன்மாக்களுக்கு அருள்பாலித்து அவர்களை நல்வழிப்படுத்துவதற்காகப் பல தடவை பல அவதாரங்களை எடுத்துவருகிறார். கண்ணபரமாத்மாவும் இத்தகைய ஓர் அவதார புருஷரே. இவர் இவ்வவதாரம் செய்யப்போகிறார் என்பதை முன்கூட்டியே இயற்கை அறிவித்துவிட்டது. ஸ்ரீமத்பாகவதம் இதை மிக அழகாக எடுத்துக்கூறுகிறது.

கண்ணபிரான் அவதரிக்கும் அப்புனிதவேளை நெருங்கிக்கொண்டிருக்கும் சமயத்தில் கிரகங்களும் நட்சத்திரங்களும் நல்ல நிலையில் இருந்தன. வானம் நட்சத்திரக் கூட்டங்களால் ஜெகஜோதியாகக் காட்சியளித்தது. உலகம் கண்ணபரமாத்மாவை வரவேற்பதற்கு விழாக்கோலம் பூண்டது போன்று காணப்பட்டது. அருவிகள் அமைதியாக ஓடின. நீர்நிலைகளில் தாமரைகள் மலர்ந்து தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தன. வனங்களில் பறவைகளின் கீத ஒலியால் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தன. காற்று குழந்தை கண்ணனின் உடலை அரவணைப்பதற்காக கந்தமுடன் கூடிய இளம் தென்றலாக வீசியது. யாககுண்டங்களில் யாகத்தீ ஜொலித்துக் கொழுந்துவிட்டெரிந்தது. சாதுக்கள் மகிழ்ச்சியால் ஆரவாரித்தார்கள். வானவர்கள் உற்சாகத்தால் ஆடிப்பாடினார்கள். இந்தத்தெய்வாம்சம் பொருந்திய இயற்கைச் சூழ்நிலையில் எல்லா ஆன்மாக்களிலும் சர்வவியாபியாக விளங்கும் ஆண்டவன் பூரணச் சந்திரன் ஜொலிப்புடன் கிழக்குவானில் விளங்கும்வேளையில் அன்னைதேவகியின் வயிற்றிலிருந்து அவதரித்தார்.

இவ்வாறு உலகத்தை உய்விக்கப் பிறந்த கண்ணபரமாத்மாவின் திருவிளையாடல்கள் எண்ணிலடங்கா. பாரதப்போரில் அருச்சுனனுக்கு கண்ணபிரான் செய்த உபதேசம் எக்காலத்திலும் எல்லா ஆன்மாக்களுக்கும் நல்வழிப்பட வழிகாட்டுவதாகும்.

"அருச்சுனா இவர்கள் எல்லோரும் இறப்பவர்கள். எனவே நீ ஒரு நிமித்தகாரணமாக கருவியாகவிரு. உண்மையில் எல்லாச் செயல்களையும் செய்பவன் நான் இருக்கிறேன்' இவ்வாறு பகவத்கீதையில் கிருஷ்ணபரமாத்மா அருச்சுனனுக்கு உபதேசம் செய்கிறார். இந்த வார்த்தைகள் ஒருவர் மனதில் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது. எமது உள்ளத்தில் நாம் ஆண்டவனின் கைக்கருவியாக வேண்டும் என்ற எண்ணம் உதயமாகும்பொழுது எமது மனம் சிந்திக்கத் தொடங்குகிறது.

ஒருவன் எவ்வாறு தன்னை ஆண்டவனின் கைக்கருவியாக்கிக்கொள்ளலாம்? ஒருவன் கண்ணன் கைக்குழலாவது எப்படி? ஆண்டவன் என்னைத் தன் இதழ்களில் பொருத்தி என்னூடாக இனிய கீதங்களை எழுப்பினால் அது எப்படியிருக்கும்? குழல் என்று கூறும்போது உள்ளீடற்ற வெற்றுக்குழலாகும். ஆனால் நானோவெனில் ஆசாபாசங்கள் நிரம்பப்பெற்றவனாக இருக்கிறேன். இவ்வாறு இருக்கும்பொழுது என்னூடாக இனிய இசையெழுப்புவது எங்ஙனம்? எனது குரலே அடைபட்டுப் போயிருக்கிறதே. நான் கனமுடைய பொருளாகவல்லவா இருக்கிறேன். நான் என்னும் அகங்காரத்தால் நிரப்பப் பட்டிருக்கிறேன். இந்த 'நான்' என்னும் அகங்காரத்தைப்போக்கி நான் வெறுமையாக வேண்டும். இவையாவும் நீங்கிப் பூரணமாக நான் வெறுமையான குழலானால்தான் என்னூடாக இறைவன் இசையெழுப்புவான்.

ஆனால் பரமாத்மாவின் வாய்க்குழலாவது இலகுவான காரியமல்ல. மிகத் துணிச்சல்மிக்கதொரு காரியமாகும். அவன் பாத அணியாக வருவதற்கு விரும்பினால் அதுகூடச் சுலபமானதல்ல. இறைவன் பாதங்களுக்கு வருத்தமளிக்காத மிகமென்மையான பாத அணியாகவிருக்கவேண்டும். அதாவது நான் இறைவன் திருவடிகளுக்கும் கற்கள் முட்களுக்கும் இடையில் இருக்கவேண்டும். இவ்வாறு இருந்து என்னைப் பக்குவப்படுத்திக்கொள்ளவேண்டும். அதாவது என்னை மென்மையாக்கிக்கொண்டிருக்கவேண்டும். எனவே ஆண்டவனுக்குப் பாதணியாவதும் சுலபமான காரியமல்ல.

ஆண்டவன் கையில் ஒரு வாளாக இருக்கவேண்டுமெனிலோ அங்கு நான் கனமுள்ள இரும்புத்துண்டாக இருக்கக்கூடாது. அவ்வாறிருப்பின் தவம் என்கின்ற சாணைக்கல்லில் என்னை மிகக் கூரிய நுனியுள்ளவனாக ஆக்கிக்கொள்ளவேண்டும். பரமாத்மாவின் கையிலே என் வாழ்க்கையெனும் வாள் பளபளத்துக்கொண்டு ஒளியுடன் விளங்கவேண்டும்.

இந்த எண்ணங்கள் என் மனதில் எழுந்தன. ஆண்டவன் கைக்கருவியாகவேண்டும் என்ற இந்தச் சிந்தனையில் நான் மூழ்கிப்போகிறேன். இந்த எண்ணம் நிறைவேறுவதற்குரிய வழியைப் பரமாத்மா கீதையின் 11-வது அத்தியாயத்தில் கடைசிச் சுலோகத்தில் கூறியுள்ளார். ஸ்ரீசங்கராச்சாரியார் இதுவே கீதையின் சாரமென்று கூறியுள்ளார்.

'உலகத்தில் கண் எவனிடத்தும் விரோதமில்லாது பட்சபாதமின்றி நடுநிலையில் நின்று எத்தவித பற்றுமின்றிப் பணியாற்றி தான் செய்யும் செயலெல்லாம் அவன் செயலென இறைவனுக்கு அவற்றை அர்ப்பணித்து அவன் நினைவில் ஆழ்ந்து, சகிப்பு, ஆசையின்மை, மனவைராக்கியம், அன்பு ஆகியவற்றைக் கொண்டுள்ள ஒருவன் ஆண்டவன் கைக்கருவியாகிறான் என்பதே கீதையின் சாரமாகும்.

(தமிழில் குணம்)

## "உதைபந்தாட்டச் சங்கத்தை பொறுப்பேற்கவேண்டும்"

### விசாரணைக் குழுமுன் சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி

"இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தை விளையாட்டமைச்சு பொறுப்பேற்கவேண்டும். இலங்கை உதைபந்தாட்டச் சங்கம் மாகாணங்களிலுள்ள கிளைச்சங்கங்களைக் கவனிப்பதில் அக்கறையற்றதாகவிருக்கிறது. மாற்றாந்தாய்ப் பிள்ளைகளாகவே இவற்றை அது கருதுகின்றது."

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிதா ரி. மதுரநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ். உதைபந்தாட்டச் சங்கத் தலைவரான வண. பிதா மதுரநாயகம், கடந்த வாரம் விளையாட்டு அமைச்சின் விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது: "விளையாட்டமைச்சு பொறுப்பேற்றால் தேசிய கோஷ்டிகளுக்கு வீரர்களைத் தெரிவு செய்வதில் பாரபட்சம் காட்டப்படமாட்டாது. அத்துடன் விளையாட்டு வீரர்களும் இத்துறையில் தம்மைப் பூரணமாகத் தயார்படுத்திக்கொள்ளத் தேவையான வசதிகளைப் பெறக்கூடியதாகவிருக்கும். விளையாட்டமைச்சு பொறுப்பேற்கும் பட்சத்தில் கிளைச்சங்கங்களின் வருடாந்த கணக்கு வழக்குகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இது சங்கங்கள் ஒழுங்கான முறையில் அமைந்து செயல்பட வழிவகுக்கும்"

இவ் விளையாட்டு விசாரணைக் குழுவுக்கு டாக்டர் ஏச். எஸ். ஆர். குணவர்த்தனா தலைவராகக் கடமையாற்றுகிறார்.

(தே நி)

## "கடமைக்கு மேல் உழைக்கவேண்டும்"

பருத்தித்துறை, வெள்ளி

"ஆசிரியர் பிற உத்தியோகத்தரைப் போலன்றி தமது வாழ்நாளில் ஏதாவது ஒரு சாதனையையாவது நிலைநாட்டவேண்டும். இவ்வருடம் செய்யவேண்டியதை அவர்கள் 'ஓவர்டைம்' என்ற போர்வையில் அடுத்த வருடம் செய்யமுடியாது. தமது கடமைக்கு மேலதிகமாக உழைத்தால் மட்டுமே அவர்கள் நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான அறிஞர்களை உருவாக்கமுடியும்."

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து பதவி உயர்வுபெற்று மாற்றலாகிச் செல்லும் ஆசிரியர் திரு எம். வேலுப்பிள்ளை தமக்களிக்கப்பட்ட பிரியாவிடைக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. எஸ். சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. ஏ. தாமோதரம்பிள்ளையும் பேசினார்.

## கிருஷ்ண ஜயந்தி

மாவிட்டபுரம், வெள்ளி

கீரிமலை நகுலகிரி நகுலமாதவப் பெருமாள் தேவஸ்தான ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி அபிஷேக விழா இன்று நடைபெற இருக்கிறது.

இவ்விழாவில் காலை இலட்சார்ச்சனை ஆரம்பமாகி விசேட அபிஷேகங்கள், பூசைகள் என்பன நடந்து மகா பூசை நடைபெறும்.

*இன்று ஆவணி மாதத்துக் கிருஷ்ணபக்ஷ அட்டமித்தினம் பொன்னாலை வரதராஜப் பெருமாள்தோற்சவம் இன்று நிகழ்கிறது. பொன்னாலைய வரலாற்றை இக்கட்டுரை சுருக்கமாகத் தருகிறது.*

# பொன்னாலயம் தோன்றியதெப்படி?

அயோத்தி முதல் துவாரகை ஈறான தக்ஷிண கைலாசமென்னும் எட்டையும் விபரித்துக் கூறிய சூதமா முனிவர் கர்மபூமி எனப்படும் குமரிக்கண்டத்தில் விளங்கும் ஆயிரத்தெட்டுச் சிவாலயங்களின் பெருமைகளையும் நூற்றெட்டு விஷ்ணு ஆலயங்களின் பெருமைகளையும் கூறுகிறார். சூதமா முனிவர் பொன்னாலை வரலாற்றையும் கூறியுள்ளார்.

முன்னொருகாலத்தில் வலைஞன் ஒருவன் பொன்னாலையத்துக்கு மேற்கிலிருக்கும் கடலில் வலையை வீசினான். அவ்வலையில் ஓர் ஆமை அகப்பட்டது. வெகுசிரமத்துடன் அவ்வாமையைக் கரைசேர்த்தும் அதைக் கொண்டு செல்ல முடியாதவனாய் அவ்விடத்துக்கு தன் இனத்தவர்களை அழைத்துச் சென்றான். அப்போது அவர்கள் பொன்னொளிவீசும் விமானமொன்றை ஆகாயத்திற் கண்டு அதிசயமுற்றார்கள். பின் அவ்வாமையைப் பார்த்தபோது கல்லாய் இருந்ததைக் கண்டு பேராச்சரியத்தினால் மோகமுற்றார்கள். எல்லோரும் மேன்மை பொருந்திய ஆமை இலக்குமி பதியே என்று ஐயமின்றி உணர்ந்து விஷ்ணு ஆலயத்தை அவ்விடத்தில் அமைக்க வேண்டுமெனத் தீர்மானித்தனர்.

இவ்வாறான தீர்மானத்துடன் சென்றவர்கள் சிற்ப நூல்வல்லுநர்களைக்கொண்டு சிறந்த விஷ்ணு ஆலயமொன்றைக்கட்டி முடித்தனர். பின் திருமால் பிரதிட்டை செய்யும் வைணவ ஆசாரியர்களைக்கொண்டு வைகானச தந்திர விதிப்படி பிரதிட்டை செய்து எழுந்தருளிய பெருமானுக்கு "வரதராசப் பெருமாள்" என்று நாமகரணஞ் செய்து வழிபட்டார்கள். பொன்னாலயேசன் கிருபையினால் மகிழ்ந்த அவர்கள் நித்திய நைமித்திய பூசைகளை உண்டாக்கிச் சிறப்பாகச் செய்து வந்தார்கள். அதனால் அவர்கள் பொருட்செல்வம் முதலிய மன எண்ணங்களெல்லாம் கைவரப் பெற்றுச் சுகமாய் வாழ்ந்திருந்தனர். இது சத்தியம்! சத்தியம்; என்று பொன்னாலயத்தைப் பற்றி சூதமா முனிவர் கூறினார். இதை கேட்ட நைமிசாரண்ய வாசிகள் வியாசருடைய மாணக்கரே! வலைஞனுடைய வலையினுள் விஷ்ணு ஏன் அகப்பட்டார்? அவ்விதம் கட்டிய வலைஞர் யார்? அங்குதோன்றிய விமானம் யாருடையது? என்று வினவினர்.

இதுகேட்டமுனிவர் மகிழ்ச்சியுடன் அவர்களைப் பார்த்துக் கூறினார்: மறையவர்களே! முன்னொருகாலத்திலே துர்வாச முனிவரிட்ட சாபத்தினால் நீசத்தன்மையடைந்த இந்திரன் சாபவிமோசனத்தின் பொருட்டு துர்வாச முனிவரைப் பலவாறு வணங்கினன். அது கண்ட துர்வாசர் இந்திரனை நோக்கி 'ஈழதேசத்தில் பொன்னாலயம் என்னும் பட்டணத்தில் வலைஞர் குலத்தில் பிறப்பாய். ஜனார்த்தனராகிய வாசுதேவர் ஒருகாலத்தில் கூர்மாவதாரம் செய்வார். உன்னால் வலையினால் அக்கூர்மம் கட்டப்படும். அந்த ஆமையின் அகம் தீண்டப்பட்டவுடன் நீ சாபத்தினின்றும் நீங்கப் பெறுவாய்' என்று கூறினார்.

துர்வாசரின் சாபத்தின்படி இந்திரன் வலைஞனாகப் பிறந்தான். ஆமையைத்தீண்டியவுடன் தன் இந்திர வடிவத்தைப்பெற்று ஆகாயத்திற் றோன்றிய விமானத்தை அடைந்தான். ஆகாயத்திற் காணப்பட்ட விமானம் இந்திரனுடையதே. கூர்மாவதாரம் கொண்ட திருமாலானவர் அறிஞனும் வலைஞனுக்குத் தன் சொரூபத்தைக் காட்டிக் களிப்போடு ஆசிர்வதித்தார். அவ்வாறு ஆசிர்வதித்த இடத்திலே திருமாலின் திருவடிச் சுவடு இருக்கிறது. அவ்விடம் மிகப் பரிசுத்தமானது. (இப்போது அவ்விடம் திருவடிநிலை என வழங்கப்படுகிறது) என்று கூறிய முனிவர் நைமிசவனவாசிகளை நோக்கி இக்கதையினை பக்தி சிரத்தையுடன் கேட்போர் படிப்போர்க்கு விரும்பிய பேறுகள் கிடைக்குமென்றும் ஆவணிமாதத்து

கிருஷ்ணபக்ஷ அட்டமி தினத்தில் பொன்னாலை வாசரும், லோகரட்சகரும் ஆகிய வரதராசப் பெருமானை தரிசனஞ்செய்து வணங்கினால் அவர்களது பாவங்கள் நீங்கும். இம்மையில் சகல செல்வங்களுடன் வாழ்வர். மறுமையில் வைகுண்ட லோகத்தில் களிப்புற்று வாழ்வார்கள் எனவும் கூறியருளினர்.

## முதலிடம் பெற்றார்

தாவடி, வெள்ளி

வலிகாமம் கிழக்கு விளையாட்டுக் கழகச்சங்கமெய்வல்லுனர்போட்டி நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றபோது. 100மீற்றர் 400-மீற்றர் ஓட்டப்போட்டியில் 19-வயதுக்குக் கீழ்ப்பட்ட பிரிவில் செல்வன் அப்புத்துரை கமலிங்கம் முதலாவது இடத்தைப் பெற்றுச் சம்பியனானார் இவர் கட்டப்பராய் கலைமணி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவர்.

363-வது தேசிய லொத்தர் சீட்டிழுப்பு
செப்டம்பர் 18-ந் திகதி குளியாப்பிட்டியவில் நடைபெறும்

விசேட பரிசுகள்

நூறு தொடரிலக்கங்களுக்கு இந்தியன் கொட்டன் சாறிகள்
பரிசுபெறும் டிக்கெட் உள்ளடங்கிய, அதே தொடருள்ள 100 இலக்கங்களுக்கு, பரிசுபெறும் டிக்கெட்டுகள் உட்பட. தேசிய லொத்தர்சபைக்கு ரூபா 30/- செலுத்தினால் ஒரு கொட்டன் சாறி பரிசாகக் கிடைக்கும்.

இன்றே ஒரு தேசிய லொத்தர் டிக்கெட் வாங்கி ஒரு லட்சம் ரூபாவுக்கும் [1,00,000] விசேட பரிசுகளுக்கும் உரியவராகுங்கள்.

தேசிய லொத்தர் சபை

# சிறந்த படம் வியட்னாம்வீடு சிறந்த நடிகர் ஜெமினிகணேசன்

## தமிழ்நாடு அரசு பரிசு

சென்னை, செப் 10
இந்த ஆண்டு சிறந்த தமிழ் படத்துக்கான தமிழ் நாடு மாநில அரசின் முதல் பரிசு 'வியட்னாம் வீடு' என்ற படத்துக்குக் கிடைத்துள்ளது.

சிறந்த நடிகருக்கான பரிசு ஜெமினிகணேசனுக்கும் சிறந்த நடிகைக்கான பரிசு கே. ஆர் விஜயாவுக்கும் கிடைத்துள்ளன.

தமிழ் நாட்டில் வெளியாகும் தமிழ் படங்களில் சிறந்தவற்றையும், சிறந்த கலைஞர்களையும் தெரிவு செய்து பரிசு கொடுக்கும் நோக்கத்துடன் திரு. நாரணதுரைக்கண்ணன் தலைமையில் தமிழ்நாடு அரசுகுழுவொன்றை நியமித்திருக்கின்றது.

இக்குழுவினர் 15 படங்களை திரையிட்டுப் பார்த்த பின்னர் மேற்படி சிறந்த படத்தை தெரிவு செய்தனர்,

இரண்டாவது பரிசு பெறும் படமான எங்கள் தங்கமும், மூன்றாவது பரிசுக்கு நம்ம குழந்தை என்ற படமும் தெரிவு செய்யப்பட்டன, திருமலைத் தென்குமரி என்ற படத்துக்கு பாராட்டு பத்திரம் வழங்கப் படுகின்றது. சிறந்த துணை நடிகருக்கான பரிசு முத்துராமனுக்கு வழங்கப் படுகின்றது.

# வெற்றியுடன் திரும்பிய வட்டு எம். பி. க்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், சனி
தேர்தல் வழக்கு அப்பீலில் வெற்றி பெற்ற வட்டுக் கோட்டை எம் பி திரு. ஏ தியாகராசா நேற்று யாழ்ப்பாணம் வந்தபோது வரவேற்களிக்கப்பட்டது.

திரு. தியாகராசாவை அவரது ஆதரவாளர்கள் பெரிய கடை வீதியில் ஊர்வலமாக அழைத்துச்சென்றனர் அவருக்கு மாலைகள் சூட்டியும் வெடிகள் கொளுத்தியும் ஆதரவாளர்கள் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்

திரு. தியாகராசா ஒவ்வொரு கடைகளுக்கும் சென்று கடைக்காரர்களைக் கட்டித்தழுவிக் கொண்டார்.

கொழும்பிலிருந்து புதிய 5ஸ்ரீ காரில் குடும்பசகிதமாக திரு. தியாகராசா நேற்று நண்பகல் யாழ் நகர் வந்துசேர்ந்தார். காரில் தமிழ்க் காங்கிரசின் நான்கு வர்ணக்கொடியும், நீலம் சிவப்பு நிறங்களைக்கொண்ட கூட்டணியின் கொடியும் கட்டப்பட்டிருந்தன.

தமிழினத்தின் நல்வாழ்விற்கும் தமிழ்மொழியின் உரிமைக்கும் இனிமேல்தான் முழு நேரத்தையும் முழு மூச்சாகச் செலவிடப்போவதாக திரு. தியாகராசா தமது ஆதரவாளர் மத்தியில் தெரிவித்தார்

இவ்வளவு காலமும் தேர்தல் வழக்குக் காரணமாகத் தமது முழு நேரத்தையும் மக்கள் நலனுக்குச் செலவிட முடியாமல் போய்விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# "அரசாங்கத்திலிருந்து கம்யூ. கட்சி விலகாது"

## உதவி கல்வி அமைச்சர் கூறுகிறார்

மாத்தறை, வெள்ளி
"அண்மையில் சில பத்திரிகைகளில் கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்தை விட்டு விலகும் என்று வெளியான செய்தி உண்மையற்றதும் விஷமத்தனமானதுமாகும் என்று மாத்தறை ஆட்சி மன்ற உறுப்பினரும் கல்வி அமைச்சின் ஆட்சிமன்றக் காரியதரிசியுமான திரு. பி. வை. துடாவை கூறியிருக்கிறார். மாத்தறைதெனியாய பஸ் சேவையை நீடிக்குமுகமாக நடாத்தப்பட்டகூட்டத்தில் சேகரகயிலேயே இப்படி அவர் சொன்னார். திரு துடாவை மேலும் கூறியதாவது.

முதலாளித்துவத்தை நாட்டில் இருந்து விரட்டுவதற்கு 1950-ம் ஆண்டிலேயே கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீ ல. சு கட்சி இலங்கை சமசமாஜக்கட்சி ஆகியவற்றுடன் ஒத்துழைக்க வேண்டும் என்பதை எடுத்துக் கூறியுள்ளது. இதற்கு ஏற்பவே கடந்த தேர்தலின் போது ஒருங்கிணைந்து கூட்டு முன்னணியை அமைத்துள்ளது. குறுகிய இக்காலத்தில் சோஷலிச சமுதாயத்தை அமைப்பது மிகக்கஷ்டமானதாகும் அண்மையில் இடம் பெற்ற பயங்கரவாத நடவடிக்கைகளின் பயனாக பெருந்தொகையான தேசிய சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன

# 1651 பேர் விடுதலை

கொழும்பு, வெள்ளி
பயங்கரவாத நடவடிக்கைகளின் காரணமாக 16355 பேர் காவலில் வைக்கப்பட்டனர். இவர்களில் 1651 பேர்விடுதலை செய்யப்பட்டுள்ளனர்'

இத்தகவலை நீர்ப்பாசன நெடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா வெளியிட்டார்.

காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள்மீது அரசவஞ்சந் தீர்க்காதென்றும் குற்றஞ் செய்யாதவர்கள் விடுதலையாவார்கள் என்றும் அவர் சொன்னார்.

# திரு. தியாகராசா தொடர்ந்து எம். பி.யாக இருப்பார்

கொழும்பு, வெள்ளி
வட்டுக்கோட்டைத் தேர்தல் ஆட்சேப அப்பீல் வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது

வட்டுக்கோட்டை ஆட்சி மன்றத் தொகுதியின் உறுப்பினராக திரு. ஏ. தியாகராஜா (தமிழ்க் காங்கிரஸ்) தெரிவுசெய்யப் பட்டதை ஆட்சேபித்து வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தங்கேணியைச் சேர்ந்த திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி என்பவரால்தொடரப்பட்ட வழக்கு தேர்தல் நீதிபதி சர் திரு. வி ரி பண்டிததுணவர்த்தனவால் செலவு தொகையுடன் முன்பு தள்ளுபடி செய்யப்பட்டது. இத் தீர்ப்பை எதிர்த்து மனுதார் உயர்நீதிமன்றத்துக்கு மனுச்செய்தார். இந்தமனு தலைமை நீதியரசர் திரு. எச். என். ஜி. பெர்னாண்டோ நீதியரசர் திரு. ஏ. எல். எஸ். சிறிமானே, நீதியரசர் திரு. ஜி. வி சமரவிக்கிரமா ஆகியோர் முன்னிலையில் விசாரிக்கப்பட்டது

மனுதார் தரப்பில் திருவாளர்கள் எச். எம். டி சில்வா, குரெசெப் தம்பையா, கே. சிவானந்தன் ஆகியோரின் உதவியுடன் ராணி அப்புக்காத்து திரு. எம் திருச்செல்வம் ஆஜராகியிருந்தார். எதிர்மனுதார் தரப்பில் திருவாளர்கள் எஸ் சர்வானந்தா, பி. சுந்தரலிங்கம், பி. துரையப்பா ஆகியோரின் உதவியுடன் ராணி அப்புக்காத்து திரு. சி. சிவாகலிங்கம் ஆஜரானார்

அப்பீல் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

# 'லேக்ஹவுஸ்' விசாரணை அறிக்கை தாக்கல்

கொழும்பு, வெள்ளி
லேக்கவுஸ்நிறுவனம் பற்றி ஆராய்ந்த ரேயல் கொமிஷனின் அறிக்கையை சபை முதல்வர் மைத்திரிபால சேனநாயக்கா ஆட்சிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

1964ம் ஆண்டு திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியை வீழ்த்துவதற்கு சில ஸ்ரீலங்கா ஆட்சி மன்ற உறுப்பினர்களுக்கு நிறுவனமோ அல்லது இவர்களோ லஞ்சம் கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு நேரடியான சாட்சியங்கள் அளிக்கப்படவில்லையென அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றுபேர் கொண்ட இக்கொமிஷனுக்கு நீதியரசர் திரு. ரி. எஸ். பெர்னாண்டோ தலைவராயிருந்தவர்.

இந்நிறுவனம் பற்றி ஆராய்வதற்கு இந்த ரேயல் கொமிஷனை மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ 1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நியமித்தார். லேக்கவுஸ் முன்னாள் பிரதிநிதி திரு. அலன்டுகேரா, தற்போதைய போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தன ஆகியோர் கொடுத்த தகவலின் அடிப்படையில் தற்போதைய நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா லேக்கவுஸ் நிறுவனம் மீது ஆட்சிமன்றத்தில் சாட்டிய குற்றச்சாட்டை அடுத்தே அக்குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்காக இந்த ரேயல் கொமிஷன் நியமிக்கப்பட்டது.

இலங்கைக்கு வெளியே புள்ள வங்கிகளில் பணம் இருப்பு வைத்திருந்தது. தேசிய சேமிப்பு பத்திரங்கள் சேமிப்பு பிணைகள் ஆகியவற்றிற்கு பிரிட்டனில் பணம் செலுத்தியது. வெளிநாட்டு கரன்சிகளை கொள்வனவு செய்தது. இவற்றைவிற்றது வெளிநாட்டிலிருந்து கிடைத்த கொமிஷன்பற்றி வருமானவரி அதிகாரிகளுக்கு உண்மைத் தகவல்களைக் கொடுக்கத் தவறியமை. செலவாணிக் கட்டுப்பாட்டு அதிகாரிக்குத் தவறான தகவல் கொடுத்தது. இது போன்ற இன்னும் பல குற்றச்சாட்டுகள் பற்றிகமிஷன் விசாரணை செய்தது.

# கொலை நடந்த இடத்தை கோர்ட்டார் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், சனி
பருத்தித்துறையில் நகைக்கடை முதலாளி கொலைசெய்யப்பட்ட இடத்தை கோர்ட்டார் நேற்றுமுன்தினம் பார்வையிட்டனர். கோர்ட்டார் சென்ற சமயம் அங்குபெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர்.

நகைக்கடையிருந்தபாதையால் போக்குவரத்து நிறுத்தப்பட்டு பொலிசார் வாகனங்களை வேறுபாதையால் திருப்பிவிட்டனர் ஜனத்திரளை கட்டுப்படுத்த பொலிசார் பெரும் சிரமமெடுத்தனர்

நீதியரசர் திரு.ஒ. எல். டி கிரெஸ்டர் முடிக்குரிய வழக்கறிஞர், எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், எதிரிகள் மூன்று சாட்சிகள், பொலிசார், பிஸ்கால் உத்தியோகத்தர்கள் சுமார் 10 ஜீப்வண்டிகளில் கொலைச் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றனர்

சுமார் 2 மணி நேரம் கொலைச் சம்பவம் நடந்த இடத்தைஇவர்கள் பார்வையிட்டனர்.

அதன்பின் அங்கிருந்து சரவெட்டிக்குச்சென்று 1-ம் எதிரியின் கடையைப் பார்வையிட்ட பின்னர் திரும்பினர்.

பருத்தித்துறைக் கொலை வழக்கு விசாரணை இம்மாதம் 13-ம் திகதி காலை தொடர்ந்து நடைபெறும்.

# சௌனற்றா சீற்றம்

கொழும்பு, வெள்ளி
"இலங்கைஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் செய்திகள் ஒலிபரப்புவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது. எதிர்க் கட்சியினரால் செனட்டில் நடாத்தப்படும் விவாதங்கள் யாவும் உள்ளவாறே ஒலிபரப்பப்படுவதில்லை'.

இவ்வாறு செனட்சபையின் எதிர்க்கட்சித் தலைவர் செனட்டர் விஜயமானே குற்றஞ்சாட்டினார். இதை அடுத்து செனட்டர் வில்லியம் பேசுகையில் முன்னைய அரசாங்ககாலத்தில் எதிர்க்கட்சியினராக இருந்த எமக்கு இலங்கை வானொலியில் எத்தகைய சந்தர்ப்பமும் வழங்கப்படவில்லையெனத் தெரிவித்தார்.

## வரவேற்பு

யாழ்ப்பாணம், சனி
யாழ்ப்பாண மாநகரசபை 20ம் வட்டார உறுப்பினர் திரு செ யோ. வீரசிங்கம் சமாதான நீதவானாக நியமனம் பெற்றதை கௌரவிக்கு முகமாக சென்மேரிஸ் ஆலய பிரதிநிதிகள் சபை, சனசமூக நிலையம், கடற்றொழிலாளர் கூட்டுறவு கட்டைச்சங்கம் சிறுவலைச்சங்கம் ஆகியன ஒன்றுசேர்ந்து பொது வரவேற்பொன்றை இன்று மாலை நடாத்துகின்றன.

மேற்படி சங்கங்கள் நடாத்திய விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் நகர முதல்வர் அல்பிரட் தி. துரையப்பா பரிசில்கள் வழங்குவார் புனித ஞானலோக மாதா கோவில்கிறிஸ்தவர்களின் ஆனந்தசிலன் என்ற நாடகமும் இவ்வைபவத்தில் இடம்பெறும்.

## சிறிமா...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

திரு சுவரன்சிங் இன்று காலையில் கவர்னர்ஜெனரல் திரு வில்லியம் கோபல்லாவை சந்தித்து தமது மரியாதையைத் தெரிவித்துக் கொண்டார்.

நாளை சனிக்கிழமை நண்பகல் இந்திய குழுவினர் நாடு திரும்புவர்.

## பெரு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜகந்நாதன் சொற்பொழிவு, இரவு 10-45- 'பாரிஜாத புஷ்பகரணம்' என்னும் பொருள்பற்றி நல்லை ஞானசம்பந்தர் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததம்பிரான் சுவாமிகளின் சங்கீத கதாப்பிரசங்கம், நள்ளிரவு 2 மணி-ஸ்ரீகிருஷ்ண ஜனனமும் ஆராதனையும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி முதல் 7-30 மணிவரை உறியடி உற்சவமும் திரு கி வா ஜகந்நாதனின் சொற்பொழிவும்.

# அவசரகாலத்தை இனிமேலும் நீடிக்க வேண்டாம்

## பிரேமதாஸ வற்புறுத்து

கொழும்பு, வியா
நாட்டில் விரைவில் "சிவில்" நிர்வாகம் ஏற்பட வேண்டும் என்று திரு ஆர். பிரேமதாஸ் நேற்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் வலியுறுத்தினார்.

அவசரகாலத்தை இனிமேலும் நடைமுறையில் வைத்திருப்பதற்கு எதுவித காரணமும் இல்லையென்று திரு. பிரேமதாஸ கூறினார்.

நிதி அமைச்சரின் குறைநிரப்பு மதிப்பீட்டு அறிக்கையின் மீது திரு. பிரேமதாஸ பேசினார்.

அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி பெரிதாகப் பேசப்படுகின்றது, ஆனால் உண்மையான அபிவிருத்தி பற்றிய அறிகுறியாக ஒன்றையும் காணக்கூடியதாய் இல்லை என்று அவர் மேலும் கூறினார்

வேலையற்றோர் பிரச்சினையை எப்படி அரசு தீர்க்கப் போகிறது என்பது பற்றி விளக்கம் தரவேண்டும் என்றும் திரு. பிரேமதாஸ கோரினார்.

அதன் பின்னர் பேசிய உதவி அமைச்சர் திரு பி ஆர். ரத்னாயக்க கிடைக்கும் வசதிகளைக் கொண்டு பொது மக்களின் கஷ்டங்களை நீக்குவதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கைகளை விளக்கினார்.

(பி பி ஏ)

